தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 152 | 4 Pages | 30.12.2024 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 152 | 4 பக்கங்கள் | 30.12.2024 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேல்**
**செல்லா துயிருண்ணுங் கூற்று**

**விளக்கம்:**
கொல்லாத அறத்தை மேற்கொண்டு நடக்கின்றவனுடைய வாழ்நாளின் மேல், உயிரைக்கொண்டு செல்லும் கூற்றுவனும் செல்லமாட்டான்.

## 179 பேர் பலியான விமான விபத்து: பலியான குடும்பங்களிடம் மன்னிப்பு கோரினார் ஏர் நிறுவன சி.இ.ஓ.



சியோல், டிச.30ற்

தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் இருந்து 175 பயணிகள், 6 விமான ஊழியர்கள் என மொத்தம் 181 பேருடன் தென்கொரியாவின் முவான் நகருக்கு இன்று விமானம் வந்துகொண்டிருந்தது. முவான் விமான நிலையத்தில் தரையிறங்க முயற்சித்தபோது விமானம் விபத்துக்குள்ளானது. லேண்டிங் கியரில் கோளாறு ஏற்பட்டதால் தரையிறங்கிய போது விமானம் விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தால் விமானம் வெடித்து சிதறியது. இந்த கோர விபத்தில் சிக்கி 85 பேர் உயிரிழந்ததாக முதற்கட்டமாக தகவல் வெளியாகி இருந்தது. இந்த சூழலில் விமான விபத்தில் 2 பேர் மட்டுமே உயிருடன் மீட்கப்பட்ட சூழலில் 179 பேர் உயிரிழந்துள்ளதாக என தகவல் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இதன்படி விபத்தில் இருந்து மீட்கப்பட்ட இருவரைத் தவிர, விமானத்தில் இருந்த அனைவரும் இறந்திருக்கலாம் என்று தீயணைப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில் விமான விபத்தை சமாளிக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டதாக ஜேஜூ ஏர் நிறுவன சி.இ.ஓ. கிம் இபே தெரிவித்துள்ளார். இதன்படி ஜேஜூ விமானத்தின் தலைமை நிர்வாக அதிகாரி, கிம் இபே, ஒரு தொலைக்காட்சி மாநாட்டின் போது, உயிரிழந்தவர்களின் குடும்பங்களிடம் ஆழ்ந்து குனிந்து விபத்துக்கு மன்னிப்பு கோரினார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், "பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு ஆதரவளிப்பதே எங்களின் முதன்மையான முன்னுரிமை. விபத்தில் உயிரிழந்த பயணிகளுக்கும், அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும் எங்களது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம். தற்போது, விபத்துக்கான சரியான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை, மேலும் அரசு நிறுவனங்களின் அதிகாரப்பூர்வ விசாரணைக்காக நாங்கள் காத்திருக்க வேண்டும். காரணம் எதுவாக இருந்தாலும், தலைமை நிர்வாக அதிகாரியாக நான் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறேன்" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சரமாரி தாக்குதல் நடத்திய உக்ரைன்: ரஷியாவில் ரெயில் சேவைகள் துண்டிப்பு



மாஸ்கோ, டிச.30


உக்ரைன்ரஷியா இடையிலான போர் சுமார் 2 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வருகிறது. இதில் உக்ரைன் மீதான தாக்குதலை ரஷிய ராணுவம் தீவிரப்படுத்தி வரும் நிலையில், மேற்கத்திய நாடுகளின் ஆயுத மற்றும் பொருளாதார உதவியுடன் ரஷியாவின் தாக்குதல்களை உக்ரைன் ராணுவம் எதிர்கொண்டு தொடர்ந்து போரிட்டு வருகிறது.

இந்த சூழலில் உக்ரைன் மற்றும் ரஷிய படைகளிடையே மீண்டும் பயங்கரமோதல் நிகழ்ந்துள்ளது. இது தொடர்பாக ரஷிய பாதுகாப்புத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், உக்ரைன் படைகள் நடத்திய 12 தாக்குதல்கள் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டதாகவும், சுமார் 450 உக்ரைன் ராணுவ வீரர்கள் இந்த தாக்குதல்களில் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.அதோடு உக்ரைன் ராணுவத்திற்கு சொந்தமான 2 பீரங்கிகள், 3 காலாட்படை தாக்குதல் வாகனங்கள் ஆகியவை அழிக்கப்பட்டுள்ளதாகவும் ரஷிய பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் ரஷியாவின் பெல்கோரோட், ரோஸ்டோவ் உள்ளிட்ட பிராந்தியங்களில் உக்ரைன் சரமாரி டிரோன் தாக்குதல் நடத்தி உள்ளது. அவற்றில் 50க்கும் மேற்பட்ட டிரோன்களை ரஷிய வான்பாதுகாப்பு படையினர் சுட்டு வீழ்த்தினர். எனினும் இந்த தாக்குதலில் வோரோனேஜ் ரெயில் நிலையத்தில் உள்ள மின்கம்பிகள் சேதமடைந்தன. இதனை சரிசெய்யும்பணியில் மீட்புபடையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். இதனால் பாதுகாப்பு கருதி அந்த வழித்தடத்தில் ரெயில் சேவைகள் நிறுத்தப்பட்டன.

இதனிடையே இந்த சம்பவம் தொடர்பாக உக்ரைன் நாட்டின் தகவல்படி, மாஸ்கோ பிராந்தியத்தில் உள்ள ஒரு ரெயில் நிலையத்தில் ஒரு சரக்கு ரெயில் வெடித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ரஷியராணுவத்திற்கு "தளவாடங்களை வழங்க" பயன்படுத்தப்பட்ட வண்டிகளை அழித்ததாகவும், வோஸ்கிரெசென்ஸ்கில் உள்ள ரெயில் நிலையத்தில் ரெயில் தண்டவாளத்தில் இரவு நேர குண்டுவெடிப்பின் வீடியோவை வெளியிட்டதாகவும் உக்ரைனின் உளவுத்துறை நிறுவனம் தெரிவித்துள்ளது.

## குஜராத்தில் லேசான நிலநடுக்கம்; ரிக்டர் அளவில் 3.2 ஆக பதிவு



காந்தி நகர், டிச.30

குஜராத் மாநிலத்தில் இன்று லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. அம்மாநிலத்தின் குட்ச் மாவட்டம் பச்சா பகுதியை மையமாக கொண்டு காலை 10.06 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது.

ரிக்டர் அளவில் 3.2 ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தால் கட்டிடங்கள் லேசாக அதிர்ந்தன. அதேவேளை, இந்த நிலநடுக்கத்தால் யாருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை.

# பொங்கல் பரிசு தொகை.. ரூ.1000 போச்சு.. மகளிர் உரிமை தொகையாவது முன்கூட்டியே வருமா? குழப்பம்

சென்னை, டிச.30

பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் திட்டம் தொடர்பான அறிவிப்பு வெளியான நிலையில் மக்கள் பலரும் அதிர்ச்சியில் உறைந்துள்ளனர். இந்த நிலையில் மகளிர் உரிமைத் தொகையாவது முன்கூட்டியே வருமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

பொங்கலை முன்னிட்டு மகளிர் உரிமை தொகை முன்கூட்டியே வழங்கப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. பொங்கல் திருநாளை முன்னிட்டு ஒவ்வொரு மாதமும் 15 ஆம் தேதி வழங்கப்பட்டு வரும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையினை, இந்த மாதம் பொங்கல் திருநாளுக்கு முன்னதாக, அதாவது, மாத தொடக்கத்திலேயே பெரும்பாலும் வரவு வைக்கப்படும் அல்லது 10ம் தேதிக்கு முன்னதாகவே வரவு வைக்கப்படும் என்று தகவல் வெளியாகி உள்ளது.

பொங்கல் பரிசு ரொக்கமாக வழங்கப்படாத நிலையில்.. மகளிர் உரிமை தொகையாவது முன்கூட்டியே வழங்கப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

பொங்கல் பரிசுத்தொகை இந்த முறை குறைக்கப்பட்டு உள்ளது. அதே போல் ரொக்கம் ரூபாய் 1000 வழங்கப்படவில்லை.

பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் திட்டத்தில் ரொக்க பணம் வழங்குவது தொடர்பாக தமிழக அரசு ஆலோசனை செய்து உள்ளது. ஆனால் மகளிர் உரிமை தொகை, புதுமை பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம் உள்ளிட்ட பல திட்டங்களுக்கு மாதம் ரூபாய் 1000 வழங்கப்படுகிறது. இதனால் நிதி நெருக்கடி அதிகம் உள்ளது.

இதை சமாளிக்கவே தமிழ்நாடு அரசு இந்த முறை பொங்கலுக்கு ரொக்க பரிசு கொடுக்காது என்று தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த வருடம் வெல்லம் வழங்கப்படவில்லை. வெல்லம் உருகிவிடுகிறது.. அதேபோல் இது தொடர்பாக புகார்கள் வைக்கப்படுகின்றன என்பதால் சர்க்கரை வழங்கப்படுகிறது. இந்த நிலையில்தான் வெல்லம் வழங்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு உள்ளது. இந்த வழக்கு காரணமாக இந்த முறை வெல்லம் வழங்கப்படுமா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. மற்றபடி ரூ.1000 தொடர்பான அறிவிப்பு வெளியாவது சந்தேகம் என்கிறார்கள்.




பொங்கல் பரிசுத்தொகை தொடர்பாக தமிழக அரசு முக்கியமான அறிவிப்பை வெளியிட்டு உள்ளது. அதன்படி பச்சரிசி, சர்க்கரை, முழுக்கரும்பு வழங்கப்படும் என்று அறிவிப்பில் தெரிவித்து உள்ளது.

தமிழ்நாடு அரசு அறிவிப்பில், 2025 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தார்களுக்கு தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழுக்கரும்பு வழங்கப்படும்.

இதன் மூலம் மொத்தமாக 2,20,94,585 அரிசி குடும்ப அட்டைதாரர்களும், இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர்களும் பயன்பெறுவார்கள் என்று அறிவித்து உள்ளனர்.

## அண்ணாமலையை போல் சாட்டையால் அடித்து கொண்ட பா.ஜ.க நிர்வாகிக்கு பலத்த காயம் மயங்கி கீழே விழுந்தார்



சூலூர், டிச.30

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் என்ஜினீயரிங் மாணவி பலாத்காரம் செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்து நேற்று கோவையில் பா.ஜ.க மாநில தலைவர் அண்ணாமலை தனக்குத்தானே சாட்டையால் அடித்துக் கொண்டார்.

இதேபோன்று, சூலூர் அருகே உள்ள ஊஞ்சபாளையத்தை சேர்ந்த கோவை வடக்கு மாவட்ட பா.ஜ.க. முன்னாள் பொதுச்செயலாளர் ஜெய்ஹிந்த் முருகேஷ்(வயது48) என்பவரும் சென்னை சம்பவத்தை கண்டித்து, தனது வீட்டின் முன்பு சாட்டையால் அடித்து கொண்டார்.

இவர் சாட்டையால் அடிப்பதை பார்த்ததும் அப்பகுதியை சேர்ந்த மக்களும், பா.ஜ.கவை சேர்ந்தவர்கள் அவரது வீட்டின் முன்பு திரண்டு விட்டனர்.

அவர்கள் வேண்டாம் என்று கூறியும், அவர் தொடர்ந்து சாட்டையால் அடித்து கொண்டார். இவ்வாறாக அவர் 9 முறை தன்னைத் தானே சாட்டையால் அடித்து கொண்டார்.

அவர் சாட்டையால் அடித்த போது, அங்கு திரண்டு இருந்த பா.ஜ.கவினர் கோஷங்களை எழுப்பினர். சாட்டையால் அடித்து கொண்டதால் அவருக்கு உடலில் பல இடங்களில் காயங்கள் ஏற்பட்டது. இருப்பினும் வலியை பொறுத்து கொண்டு அவர் வீட்டிற்குள் சென்றார்.

வீட்டிற்குள் சென்ற சிறிது நேரத்திலேயே, ஜெய்ஹிந்த் முருகேசுக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டது. திடீரென வீட்டிற்குள் மயங்கி விழுந்தார். இதையடுத்து உறவினர்கள் அவரை மீட்டு சூலூரில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.

அங்கு அவருக்கு டாக்டர்கள் சிகிச்சை அளித்தனர். அதன்பின்னர் இரவில் அவர் வீடு திரும்பினார். இந்த சம்பவத்தால் கோவையில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

## சென்னையில் டிச.31 ஜன.1 வரை கடலில் குளிக்கத் தடை

சென்னை, டிச.30

புத்தாண்டையொட்டி டிச.31 மாலை முதல் ஜன.1 வரை கடலில் குளிக்கவோ, இறங்கவோ தடை விதிக்கப்பட்டுள்ளது.

சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், தலைமையில் 2025ம் ஆண்டு புத்தாண்டு நாளையொட்டி பொதுமக்கள் அமைதியாகவும், பாதுகாப்பகாவும் புத்தாண்டு கொண்டாட இன்று (28.12.2024) காவல் ஆணையாளர் அலுவலகத்தில், காவல் அதிகாரிகளுடன் கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டது.

இதில் சென்னை பெருநகரில் பணிபுரியும் கூடுதல் காவல் ஆணையாளர்கள், இணை ஆணையாளர்கள் மற்றும் துணை ஆணையாளர்கள் கலந்துகொண்டனர். 31.12.2024 அன்று இரவு 9.00 மணியிலிருந்து காவல் அதிகாரிகள் மற்றும் ஊர்க்காவல் படையினர் மூலம் கடற்கரை, வழிபாட்டு தலங்கள் உள்ளிட்ட பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் தனிக் கவனம் செலுத்தி பாதுகாப்பை அதிகரிக்க காவல் ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார்.

முக்கிய சாலைகளில் வாகன நெரிசலை தடுத்தல், அதிவேகமாக செல்லும் வாகனங்களையும், இருசக்கர வாகன வேக பந்தயத்தில் ஈடுபடுவர்களையும் தடுத்து கண்காணிக்க கண்காணிப்பு சோதனை குழுக்களை அமைத்து விபத்தில்லா புத்தாண்டு கொண்டாடுவதற்கு காவல் துறை பணி சிறப்பாக செய்ய வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்.

புத்தாண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு, 31.12.2024 மாலை முதல் 01.01.2025 வரை பொதுமக்கள் கடல் நீரில் இறங்கவோ, குளிக்கவோ அனுமதி இல்லை, கடற்கரையோரங்களில் உரிய தடுப்புகள் அமைத்து முன்னேற்பாடுகள் செய்யவும், மெரினா, சாந்தோம், எலியட்ஸ் மற்றும் நீலாங்கரை உள்ளிட்ட கடற்கரை பகுதிகளில் காவல் அதிகாரிகள், குதிரைப்படைகள் மற்றும் மணலில் செல்லக்கூடிய வாகனங்கள் மூலம் கண்காணித்து நடவடிக்கை எடுக்கவும், மணல் பகுதியிலும் தற்காலிக காவல் உதவி மைய கூடாரங்கள் அமைத்து பாதுகாப்பு பலப்படுத்தவும். மெரினா, சாந்தோம் பகுதி மற்றும் காமராஜர் சாலையிலும் உதவி மைய கூடாரங்கள் அமைத்தும், முக்கிய இடங்களில் டிரோன் கேமிராக்கள் மூலம் கண்காணித்து குற்றத் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் ஆலோசிக்கப்பட்டது.



கடற்கரை ஒட்டிய பகுதிகளில் தமிழ்நாடு காவல் துறை, கடலோர பாதுகாப்பு குழுமம், மெரினா கடற்கரை உயிர்காக்கும் பிரிவினருடன் இணைந்து தகுந்த பாதுகாப்பு நடவடிக்கையும், எச்சரிக்கை பதாகைகளும் பொருத்தப்பட்டு கடலில் யாரும் மூழ்காமல் தடுக்க நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தியுள்ளார். மேலும், அவசர மருத்துவ உதவிக்கு, முக்கிய இடங்கள் மற்றும் பொதுமக்கள் அதிகளவு கூடும் இடங்களின் அருகில் ஆம்புலன்ஸ் வாகனங்கள் மருத்துவ குழுவினருடன் தயார் நிலையில் நிறுத்தி வைக்க ஏற்பாடுகள் செய்ய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மன்மோகன் சிங் இறப்பில் காங்கிரஸ் மலிவான அரசியல் செய்கிறது: பாஜக குற்றச்சாட்டு

## தைலாபுரத்தில் சமாதான பேச்சு! ராமதாஸ் அன்புமணி சந்திப்பு

விழுப்புரம், டிச.30

பாமக இளைஞரணித் தலைவர் பதவி நியமனம் தொடர்பாக கட்சியின் நிறுவனர் ராமதாஸ் மற்றும் தலைவர் அன்புமணி ராமதாஸ் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டை தொடர்ந்து, தைலாபுரம் தோட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை சமாதான பேச்சுவார்த்தை நடைபெற்றது.

பாமகவின் 2025 ஆம் புத்தாண்டு சிறப்பு பொதுக் குழுக் கூட்டம் பட்டனூரில் சனிக்கிழமை நடைபெற்றது. அப்போது பாமகவின் இளைஞரணித்தலைவராக தனது மகள்வழிப் பேரன் ப . முகுந்தனை நியமிப்பதாக கட்சியின் நிறுவனர் ராமதாஸ் அறிவித்தார்.

இதற்கு கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் எதிர்ப்பு தெரிவித்து, கட்சியில் சேர்ந்து 4 மாதங்களே ஆன நிலையில், அவருக்கு பதவி தருவதற்கு பதிலாக, சுறுசுறுப்பாக பணியாற்றக் கூடிய நபருக்கு அப்பதவியை வழங்கலாம் எனத் தெரிவித்து பேசினார்.

உடனடியாக ராமதாஸ், என்னால் உருவாக்கப்பட்ட கட்சி இது. அவர் இளைஞர் சங்கத் தலைவராக நியமிக்கப்படுகிறார் என மீண்டும் பேசினார். இதையடுத்து மேடையிலிருந்து அன்புமணி ராமதாஸ் வெளியேறி சென்னைக்குபுறப்பட்டு சென்றார்.



இந்தநிலையில், விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அருகிலுள்ள தைலாபுரம் தோட்டத்தில் ராமதாஸுக்கும் , அன்புமணி ராமதாஸுக்கும் இடையேயான சமாதான பேச்சுவார்த்தை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் தொடங்கி நடைபெற்றது.

கட்சியின் கௌரவத் தலைவர் கோ. க மணி, நிலையச் செயலர் அன்பழகன், வன்னியர் சங்க செயலர் கார்த்தி மற்றும் குடும்ப உறுப்பினர்கள் இதில் பங்கேற்றனர்.

தினகனி



# விபத்தில் அ.தி.மு.க மாவட்ட இணை செயலாளர் பலி

நாகப்பட்டினம், டிச.30

நாகை மாவட்டம் திருக்குவளையை சேர்ந்தவர் நாகப்படன். இவரது மகள் மீனா (வயது 42) திருமணமாகவில்லை.

இவர் அ.தி.மு.க மாவட்ட இணை செயலாளராக இருந்தார். மேலும் கீழ்வேளூர் சட்டமன்ற தொகுதியில் அ.தி.மு.க வேட்பாளராக போட்டியிட்டவர்.

முன்னாள் கீழையூர் ஒன்றிய தலைவராக இருந்த மீனா நேற்று திருக்குவளையில் இருந்து காமேஸ்வரத்திற்கு ஒருவரது மோட்டார்சைக்கிளில் ஏறி புறப்பட்டார். அப்போது ரோட்டில் நாய் ஒன்று ஓடியது.

இதனால் மோட்டார் சைக்கிளை ஓட்டியவர் திடீரென பிரேக் போட்டத்தில் பின்னால் அமர்ந்திருந்த மீனா நிலைதடுமாறி கீழே விழுந்தார். இதில் தலையில் பலத்த காயமடைந்த மீனாவை அக்கம்பக்கத்தினர் மீட்டு ஓரத்தூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அனுமதித்தனர். பின்னர் அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக தஞ்சை மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி மீனா நேற்று இரவு இறந்தார்.



இது குறித்த புகாரின் பேரில் கீழையூர் போலீசார் வழக்குப்பதிவு செய்துவிசாரணை நடத்தி வருகின்றனர்.

# மயக்க ஊசி செலுத்தி பிடிக்கப்பட்ட புல்லட் ராஜா யானை மக்கள் நிம்மதி



ஊட்டி, டிச.30

நீலகிரி மாவட்டம் பந்தலூர் அடுத்த சேரங்கோடு மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த ஒரு மாதமாக புல்லட் ராஜா என்ற காட்டு யானையின் அட்டகாசம் அதிகரித்து காணப்பட்டது.

கடந்த ஒரு மாதத்தில் 48க்கும் மேற்பட்ட குடியிருப்புகளை சேதப்படுத்தி, அரிசி, பருப்பு உள்ளிட்ட பொருட்களை சாப்பிட்டும், விளைநிலங்களை சேதப்படுத்தியும் அட்டகாசத்தில் ஈடுபட்டதால் அப்பகுதி மக்கள் அச்சத்தில் உறைந்தனர்.

யானையை மயக்க ஊசி செலுத்தி பிடிக்க கோரி பொதுமக்கள் போராட்டம் நடத்தினர். அதனை தொடர்ந்து 75 பணியாளர்கள் கொண்ட வனப்பணியாளர்கள் மற்றும் கும்கி யானைகள் உதவியுடன் வனத்துறையினர் யானையின் நடமாட்டத்தை கண்காணித்தனர்.

ஆனாலும் யானையின் அட்டாகசம் தொடர்ந்து அதிகரித்தது. இதை தொடர்ந்து யானையை மயக்க ஊசி செலுத்தி பிடிக்க வனத்துறை முடிவு செய்தது.

அதன்படி நேற்று மாலை, சேரம்பாடி பகுதியில் புல்லட் யானை முகாமிட்டு இருப்பதை அறிந்த வனத்துறையினர் அங்கு விரைந்தனர்.

பின்னர் கால்நடை டாக்டர் ராஜேஷ்குமார் பரண் மீது இருந்தவாறு புல்லட் யானை மீது மயக்க ஊசியை செலுத்தினார். இதில் யானை மயக்கம் அடைந்த நிலையில் அங்கு நடமாடியது.

தொடர்ந்து விஜய், சீனிவாசன் என்ற கும்கி யானைகள் உதவியுடன் புல்லட் யானையை பிடித்த வனத்துறையினர்,லாரிகொண்டு வந்து யானையை அதில் ஏற்றினர்.

பின்னர் யானை அங்கிருந்து கோவை மாவட்டம் பொள்ளாச்சி அடுத்த டாப்சிலிப் யானைகள் முகாமுக்கு கொண்டு வரப்பட்டது.

டாப்சிலிப் யானைகள் முகாமுக்கு யானை வந்தது. அங்கு யானைகள் முகாமில் வைத்து யானையை பராமரிக்க உள்ளதாக தெரிகிறது.

கடந்த ஒரு மாதமாக அட்டகாசத்தில் ஈடுபட்ட வந்த புல்லட் ராஜா யானை பிடிபட்டதால் அப்பகுதி பொதுமக்கள் நிம்மதி அடைந்துள்ளனர்.

# 4 நாட்களுக்கு பட்டா இணையதளம் செயல்படாது தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, டிச.20

தமிழக அரசின் நில அளவை மற்றும் நில வரித்திட்ட இயக்குனர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் இணையவழி பட்டா மாறுதல் சேவையான "தமிழ்நிலம்" மென்பொருளில், விவசாயிகள் விவரப் பதிவேடு தொடர்பான தொழில்நுட்ப பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. எனவே 28ந்தேதி (இன்று) காலை 10 மணி முதல் 31ந்தேதி மாலை 4 மணி வரை 4 நாட்கள் இணையவழி பட்டா மாறுதல் மேற்கொள்ளும் "தமிழ்நிலம்" https://tamilnilam.tn.gov.in/Revenue/ மற்றும் https://eservices.tn.gov.in/eservicesnew/index.html பட்டா இணையவழி சேவை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்படுகிறது.

# உடுமலை வனப்பகுதியில் சாரல் மழை முழு கொள்ளளவில் நீடிக்கும் அமராவதி அணை



உடுமலை, டிச.30

திருப்பூர் மாவட்டம் உடுமலை அருகே உள்ள அமராவதி அணை வாயிலாக திருப்பூர், கரூர் மாவட்டங்களில் உள்ள 54,637 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. நடப்பாண்டு தென்மேற்கு பருவமழையால் ஜூலை 18ந்தேதி அணை நிரம்பியது.

தொடர்ந்து வடகிழக்கு பருவமழையால் கடந்த நவம்பர் 27ந்தேதி அணை நிரம்பியது. தொடர்ந்து, தற்போது பாசனத்திற்கு நீர் திறக்கப்பட்டு வருகிறது. அணை நீர்மட்டம் இன்று காலை நிலவரப்படி, மொத்தமுள்ள 90 அடியில் 89.51 அடியாக உள்ளது. அணைக்கு நீர் வரத்து வினாடிக்கு 263 கனஅடியாகவும், நீர் திறப்பு 250 கனஅடியாகவும் உள்ளது.

அமராவதி அணை நீர் நிரம்பி ததும்பும் நிலையில், மீன் பிடிப்பு பாதித்துள்ளது. அணையில் மீன் வளர்ச்சிக்கழகம் சார்பில், திலேபியா, மிர்கால், ரோகு உள்ளிட்ட மீன் குஞ்சுகள் இருப்பு செய்து வளர்க்கப்பட்டு மீனவர்கள் வாயிலாக பிடிக்கப்படுகிறது.

இதற்காக தலா 2 பேரை கொண்ட 20 படகுகள், வலைகள் என 20 குழு மீனவர்கள் உள்ளனர். தற்போது, அணை நிரம்பிய நிலையில் காணப்படுவதோடு, பனிப்பொழிவு அதிகரித்து குளிர் சீதோஷ்ண நிலையும் காணப்படுகிறது.

இதனால் இரவு நேரங்களில் மீன் பிடிக்கும் பணி தடைபட்டுள்ளது. காலை 10 மணிக்கு துவங்கி மாலை, 5 மணி வரை மட்டுமே, மீனவர்கள் வலை விரித்து மீன் பிடிக்கின்றனர். நீர்இருப்பு அதிகமாக உள்ளதால், குறைந்தஅளவு மட்டுமே மீன் சிக்குகிறது. வழக்கமாக, 300 கிலோ வரை மீன் கிடைத்து வரும் நிலையில், தற்போது 100 கிலோவுக்கும் குறைவாகவே கிடைப்பதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

அமராவதி அணை சுற்றுலா தலமாக உள்ளதால், பல்வேறு மாவட்டங்களில் இருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். வனத்துறை முதலை பண்ணை, அமராவதி அணை பூங்காவுக்கு வரும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில், மகளிர் சுய உதவி குழு வாயிலாக அமராவதி அணையில் படகு சவாரி செயல்படுத்தப்படுகிறது. பருவமழை பொழிவால், அணை நிரம்பிய நிலையில் உள்ளதால் சுற்றுலா பயணிகள் பாதுகாப்பு கருதி கடந்த ஒரு மாதமாக படகு சவாரி முடங்கி உள்ளது.

# ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடத்தை இடிக்கும் போது சுவர் விழுந்து தொழிலாளி பலி



தாளவாடி, டிச.30

ஈரோடு மாவட்டம் தாளவாடி ஒன்றியத்துக்கு உட்பட்டது கேர்மாளம் ஊராட்சி. இந்த ஊராட்சி அலுவலகம் கட்டிடம் மிகவும் பழுதடைந்து எப்பொழுது வேண்டுமானாலும் இடிந்து விழும் நிலையில் இருந்தது.

இந்த கட்டிடத்தை அகற்றிவிட்டு புதிய கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கப்பட்டது. புதிய கட்டிடம் கட்ட ஒப்பந்ததாரர் பழுதடைந்த அலுவலக கட்டிடத்தை ஆட்கள் மூலம் இடித்துக் கொண்டிருந்தார்.

அப்பொழுது கூலி தொழிலாளி கடம்பூர் மாக்கம்பாளையத்தைச்சேர்ந்த சிக்குமாதன் (வயது 45) என்பவர் கட்டிடத்தின் உள்ளே சென்று ஏணி எடுத்துவர சென்றுள்ளார். அப்போது கட்டிடத்தின் சுவர் கூலிதொழிலாளியின் மீது விழுந்தது.

இதில் பலத்த காயம் அடைந்த சிக்குமாதனை அங்கிருந்தவர்கள் கேர்மாளம் அரசு துணை சுகாதார நிலையத்தில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை பெற்று பின்னர் மேல்சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலம் சத்தியமங்கலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அங்கு அவரை பரிசோதனை செய்த மருத்துவர் கூலிதொழிலாளி சிக்குமாதன் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தார். இது குறித்து ஆசனூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# விளையாட்டு போட்டி முடிந்து வீடு திரும்பிய பள்ளி மாணவியை கடத்தி பாலியல் பலாத்காரம் செய்த வாலிபர்

தக்கலை, டிச.30

சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் காதலருடன் இருந்த குமரி மாவட்ட மாணவி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட சம்பவம் நாடு முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த சம்பவத்தில் ஒருவர் கைது செய்யப்பட்ட நிலையில், பாதிக்கப்பட்ட மாணவியின் தகவலுடன் கூடிய எப்.ஐ.ஆர். வெளியான சம்பவம் பலருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இதனைகண்டித்து அரசியல் கட்சிகள் போராட்டத்தில் இறங்கி உள்ளன. சென்னை ஐகோர்ட்டும் இது தொடர்பாக கண்டனம் தெரிவித்துள்ளது. இந்த பரபரப்பு அடங்குவதற்குள் குமரி மாவட்டத்தை சேர்ந்த மற்றொரு மாணவி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதாக புகார் வந்து பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

வெளிமாவட்டத்தில் நடைபெற்றவிளையாட்டு போட்டியில் பங்கேற்றுவிட்டு திரும்பிய அவர், இயற்கை உபாதை கழிக்க சென்ற போது இந்த சம்பவம் நடந்திருப்பதாக கூறப்படுகிறது.

தக்கலை சேர்ந்த தொழிலாளிக்கு 2 மகள்கள் உள்ளனர். தனியார் மேல்நிலைப் பள்ளியில் பிளஸ்2 படித்து வரும் அவரது இளைய மகள், கைப்பந்து விளையாட்டில் பங்கு பெற்று வந்துள்ளார். கடந்த 25ந் தேதி இவர், உடற்பயிற்சி ஆசிரியை மற்றும் 14 மாணவிகளுடன் கைப்பந்து விளையாட்டு போட்டியில் பங்கேற்க திருச்சி மாவட்டம் சென்றார்.

போட்டி முடிந்ததும் அவர்கள் இரவு 9 மணியளவில் குமரி மாவட்டம் திரும்பி உள்ளனர். சக மாணவிகள் வீட்டுக்கு புறப்பட்டுச் செல்ல தொழிலாளியின் மகள் மட்டும் தனது தந்தை வருகைக்காக காத்திருந்துள்ளார். அப்போது இயற்கை உபாதையால் அவதிப்பட்ட அவர், அதற்காக இடம் தேடியுள்ளார்.

அந்த நேரத்தில் அங்கு அதேபகுதியை சேர்ந்த பைசல்கான் (வயது 37) என்பவர் வந்துள்ளார். அவர், மாணவியிடம் நைசாக பேசி உதவி செய்வது போல் நடித்து தனது வீட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளார். அங்கு மாணவி கழிவறை சென்று வந்ததும், அவரை வீட்டின் அறையில் அடைத்து வைத்து பைசல்கான் பல முறை பாலியல் பலாத்காரம் செய்தாராம்.

இந்நிலையில், பைசல்கான் பிடியில் இருந்து தப்பி மாணவி தனது வீட்டிற்கு வந்தார். அவரின் நிலையை பார்த்து பெற்றோர் பதறினர். அப்போது, மாணவி தனக்கு நடந்த பாலியல் கொடுமையை கூறி கதறி அழுதுள்ளார். இதனை கேட்டு அதிர்ச்சி அடைந்த மாணவியின் தாயார் மார்த்தாண்டம் அனைத்து மகளிர் போலீசில் புகார் கொடுத்தார். அதன்பேரில் விசாரணை நடத்திய போலீசார் பாதிக்கப்பட்ட மாணவியை மீட்டு ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைகாக சேர்த்துள்ளனர். மேலும் பைசல்கான் மீது போக்சோ உள்ளிட்ட 3 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து நேற்று இரவு கைது செய்தனர். அவரிடம் போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் குமரி மாவட்டத்தில்பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# பழைய குற்றால அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி



தென்காசி, டிச.30

தென்காசி மாவட்டத்தில் கடந்த 13ந்தேதி பெய்த தொடர் மழையின் காரணமாக குற்றால அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இதில் மெயின் அருவி மற்றும் பழைய குற்றால அருவி பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு கம்பிகள் வெள்ள நீரில் அடித்து செல்லப்பட்டு சேதம் அடைந்தது.

இந்நிலையில் வெள்ள நீர் குறைந்த சில நாட்களிலேயே மெயின் அருவியில் சுற்றுலா பயணிகள் மற்றும் ஐயப்ப பக்தர்கள் குளிக்க அனுமதி வழங்கப்பட்ட நிலையில் கடந்த 15 நாட்களுக்கு மேலாக பழைய குற்றால அருவி பகுதியில் எவ்வித சீரமைப்பு பணிகளும் மேற்கொள்ளாததால் சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு தடை நீட்டிக்கப்பட்டிருந்தது.

விவசாய சங்கங்கள், சுற்றுலா பயணிகள், வியாபாரிகள் என பலரும் பழைய குற்றால அருவியில் உடனடியாக சீரமைப்பு பணிகளை மேற்கொண்டு சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி வழங்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என மாவட்ட நிர்வாகத்திற்கு கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்த நிலையில் இன்று காலை முதல் பழைய குற்றால அருவியில் சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. பழைய குற்றால அருவியில் தண்ணீர் சீராக விழுந்து வரும் நிலையில் அனுமதி வழங்கப்பட்டதால் சுற்றுலா பயணிகள் ஆர்வமுடன் அருவியில் குளித்து மகிழ்ந்து வருகின்றனர்.

மேலும் அருவிகரையை சுற்றி பாதுகாப்பு கம்பிகள் மீண்டும் அமைப்பதற்கான பணிகள் தொடர்ந்து நடைபெறும் எனவும், சுற்றுலா பயணிகள் பாதுகாப்புடன் குளித்து செல்லுமாறு மாவட்ட நிர்வாகம் சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மெயின் அருவியிலும் தண்ணீர் வரத்து சற்று குறைந்து சீராக விழுந்து வருவதால் அங்கும் காலை முதலே ஐயப்ப பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் ஆர்வமுடன் குளித்து மகிழ்ந்தனர்.

# தேன்கனிக்கோட்டை வனப்பகுதியில் முகாமிட்டிருந்த 35 யானைகள் கர்நாடகாவுக்கு விரட்டியடிப்பு



தளி, டிச.30

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை வனப்பகுதியில் முகாமிட்டிருந்த 35 க்கும் மேற்பட்ட காட்டு யானைகளை கடந்த சில நாட்களுக்கு முன் ஜவளகிரி வனப்பகுதிக்கு வனத்துறையினர் விரட்டியடித்தனர்.

இந்த யானைகளை கர்நாடகாவுக்கு விரட்டும் பணியில் வனத்துறையினர் ஈடுபட்டனர்.

இதையடுத்து நேற்று முன்தினம் கர்நாடக மாநில வனப்பகுதி நோக்கி யானைகள் கூட்டம் சென்றன. இதனால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் நிம்மதி அடைந்துள்ளனர். இந்நிலையில் தேன்கனிக்கோட்டை வனப்பகுதியில் 15 க்கு மேற்பட்ட காட்டு யானைகள் தனியாக முகாமிட்டு விவசாய பயிர்களின்நாசம் செய்து வருகின்றன.

அதேபோல் ஜவளகிரி வனப்பகுதியிலும் 60க்கும் மேற்பட்ட காட்டு யானைகள் உலா வருவதால் விவசாயிகள் பாதுகாப்பாக இருக்குமாறு வனத்துறையினர் எச்சரித்துள்ளனர்.

# மேட்டூர் அணை நீர்மட்டம் 119.72 அடியை எட்டியது

சேலம், டிச.30

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழையின் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து காணப்படுகிறது. இதன் காரணமாக அணையின் நீர்ம ட்டம் மெதுவாக உயர்ந்து வருகிறது. அணைக்கு வினாடிக்கு 2701 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. அணையின் நீர்மட்டம் 119.72 அடியாக உயர்ந்து காணப்பட்டது. அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு 500 கனஅடியும், கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்துக்கு வினாடிக்கு 300 கனஅடியும் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. தற்போது அணையில் 93.02 டி.எம்.சி. தண்ணீர் இருப்பு உள்ளது.

# குன்னூரில் தொடர் அட்டகாசம்: கரடியை பிடிக்க 3 இடங்களில் கூண்டு வைப்பு



குன்னூர், டிச.30

நீலகிரி மாவட்டம் குன்னூர் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த சில நாட்களாக கரடியின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

ஊருக்குள் புகும் கரடி ரேசன் கடைகள், அங்கன்வாடி மற்றும் சத்துணவு கூடங்களை சேதப்படுத்தி அங்குள்ள பொருட்களை தின்று நாசப்படுத்தி வருகிறது.

கடந்த 10 நாட்களில் மட்டும் கிளண்டல் நான்சச் மற்றும் கிளன் மோர் உள்ளிட்ட பகுதிகளில் சுற்றி திரியும் கரடி அங்குள்ள குடியிருப்பு மற்றும் பள்ளிகளின் ஜன்னல் கதவுகளையும் சேதப்படுத்தியது. கரடி நடமாட்டத்தால் மக்கள் பீதியில் உள்ளனர்.

அத்தியாவசிய தேவைகளுக்கு கூட வெளியில் வர அச்சப்பட்டு வீடுகளுக்குள் முடங்கியுள்ளனர். மேலும் பள்ளி, கல்லூரி செல்பவர்கள், வேலைக்கு செல்வோர் ஒருவித அச்சத்துடனேயே வெளியில் சென்று வருகிறார்கள். தொடர்ந்து குடியிருப்பு பகுதிக்குள் புகுந்து மக்களை அச்சுறுத்தி வரும் கரடியை கூண்டு வைத்து பிடிக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று வனத்துறையினர் கரடியை பிடிக்க கூண்டு வைத்தனர்.

அதன்படி கரடி நடமாட்டம் உள்ள பகுதிகளான டைகர் ஹில், டென்ட் ஹில், நான்சச் ஆகிய 3 இடங்களில் கூண்டு வைக்கப்பட்டுள்ளது.

கரடிக்கு கூண்டு வைக்கப்பட்டுள்ளது தெரியாத வகையில் முழுவதுமாக மரத்தின் கிளைகள் மற்றும் இலைகளைகொண்டு மூடி வைத்து கரடியை பிடிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதுகுறித்து குன்னூர் வனச்சரகர் ரவீந்திரநாத் கூறுகையில், கரடியை பிடிக்க கூண்டு வைக்கப்பட்டுள்ளது. ஒரு மாத காலமாகவே கரடியை கண்காணித்து வருகிறோம். கூண்டின் அருகே வரும் கரடி அதில் உள்ள பழங்களை மட்டும் ருசித்து விட்டு லாவகமாக கூண்டில் சிக்காமல் தப்பி ஓடிவிடுகிறது. தொடர்ந்து வன ஊழியர்கள் தொடர்ந்து கண்காணிப்பு மற்றும் ரோந்து பணியில் ஈடுபட்டுள்ளனர் என்றார்.

# மாணவிக்கு ரூ.25 லட்சம் இழப்பீடு, விசாரணைக்கு 3 பெண் ஐ.பி.எஸ். அதிகாரிகள்: ஐகோர்ட் அதிரடி

சென்னை, டிச.30

அண்ணா பல்கலைக்கழக மாணவி வன்கொடுமை செய்யப்பட்ட விவகாரம் தொடர்பான அறிக்கை சென்னை ஐகோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டது. இதையடுத்து இந்த வழக்கு விசாரணை ஐகோர்ட்டில் நடைபெற்றது.



இந்நிலையில்,அண்ணா பல்கலைக்கழக மாணவி வன்கொடுமை வழக்கில் 3 பெண் ஐ.பி.எஸ். அதிகாரிகள் அடங்கிய புலனாய்வுகுழுவைசென்னை ஐகோர்ட் அமைத்துள்ளது. இந்த வழக்கின் விசாரணையை கண்காணிக்க சிறப்பு புலனாய்வு குழு அமைக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு தானாக முன்வந்து குழு அமைக்க ஒப்புக்கொண்டது. அண்ணா நகர் துணை ஆணையர் சினேகபிரியா, ஆவடி துணை ஆணையர் ஐமான் ஜமால், சேலம் துணை ஆணையர் பிருந்தா ஆகியோர் இந்த குழுவில் இடம் பெற்றுள்ளனர். மாணவியின் விவரங்கள் வெளியானதால் பாதிக்கப்பட்ட மாணவிக்கு ரூ.25 லட்சம் இழப்பீடாக வழங்க சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

# காவல் ஆணையருக்கு எதிராக சட்ட நடவடிக்கை, விசாரணையை மாற்ற வேண்டும்: சாட்டையை சுழற்றும் ஐகோர்ட்



சென்னை, டிச.30

அண்ணா பல்கலைக்கழக மாணவி வன்கொடுமை செய்யப்பட்ட விவகாரம் தொடர்பான அறிக்கை சென்னை ஐகோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டது.

இதையடுத்து இந்த வழக்கு விசாரணை ஐகோர்ட்டில் நடைபெற்றது. வழக்கை விசாரித்த நீதிபதிகள் கூறும்போது,

★ மாணவியின் அடையாளத்தை எப்.ஐ.ஆர்ல் குறிப்பிட்டது சட்டப்படி தவறு. பாதிக்கப்பட்ட மாணவியின் கண்ணியம் காக்கப்படவில்லை.

★ ஒரு பெண் எப்படி இருக்க வேண்டும் என போதிப்பதைவிடஅவரை கண்ணியத்துடன் நடத்துவதை உறுதிப்படுத்த வேண்டும்.

★ பெண்களுக்கு எப்படி மரியாதை தர வேண்டும் என்பதை சமுதாயம் கற்றுக்கொள்ள வேண்டும்.

★ குற்றம் நடைபெற்றால் பெண்தான் குற்றம் சாட்டப்படுகிறாள். ஆண், பெண் இருபாலரும் சமம் என்ற நிலை உருவாக வேண்டும்.

★ பெண்கள் மீது குற்றம் சாட்டப்படுவது குற்றவாளிக்கு சாதகமாகி விடும்.

★ பெண்களுக்கு இந்த சமுதாயத்தில் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும்.

★ தனிப்பட்ட முறையில் யாருடனும் பேசுவதில் தவறு இல்லை. அது பெண்களுக்கான உரிமை, யாரும் தலையிட முடியாது.

★ ஆண் என்பதற்காக பெண்களை தொட உரிமை இல்லை.

★ *Victim Blaming and Victim Shaming* கூடாது.

★ பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட அண்ணா பல்கலைக்கழக மாணவிக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும்.

★ மாணவி தனது படிப்பை தொடர்வதை அண்ணா பல்கலைக்கழகம் உறுதிப்படுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட மாணவியின் படிப்புக்கான செலவை இனி அவரிடம் வசூலிக்கக்கூடாது. மாணவி படிப்பு செலவுகளை ஏற்க வேண்டும்.

★ எப்.ஐ.ஆர். லீக் ஆனதில் மாணவியின் குடும்பத்தினர் மன உளைச்சலுக்கு ஆளாகி உள்ளனர்.

★ காவல் ஆணையரின் கீழ் பணிபுரியும் அதிகாரியிடம் இருந்து விசாரணையை மாற்ற வேண்டும். விசாரணையை மாற்ற வேண்டியது தவிர்க்க முடியாதது.

★ காவல் ஆணையருக்கு எதிராக சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திட்டவட்டமாக கூறினர்.

# திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் சென்னை பக்தர்கள் 4 பேர் தற்கொலை



திருவண்ணாமலை, டிச.30

சென்னை வியாசர்பாடியை சேர்ந்தவர் மகாகாலயாசர் (வயது45). இவரது மனைவி ருக்மணி பிரியா(40). மகள் ஜலந்தரி (17) மகன் ஆகாஷ்குமார் (15) ஆகியோர் திருவண்ணாமலைக்கு ஆன்மீக பயணமாக வந்தனர்.

அவர்கள் திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் உள்ள சூரியலிங்கம் அருகே தனியாருக்கு சொந்தமான பண்ணை வீட்டில் தங்கியிருந்தனர்.

இன்று காலை நீண்ட நேரமாகியும் அவர்கள் வெளியே வரவில்லை. பண்ணைவீட்டில்வேலை செய்யும் பணியாளர்கள் சென்று பார்த்த போது அறை கதவு பூட்டப்பட்டிருந்தது. சந்தேகமடைந்த அவர்கள் இது குறித்து திருவண்ணாமலை தாலுகா போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர்.

அப்போது வீட்டுக்குள் 4 பேரும் இறந்து கிடந்தனர். அவர்கள் உடல்களை மீட்டு திருவண்ணாமலை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

அவர்கள் தங்கியிருந்த அறையில் டைரி ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அதில் நாங்கள் இறைவனிடம் செல்கிறோம் என எழுதப்பட்டுள்ளது. முதல் கட்ட விசாரணையில் 4 பேரும் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டது தெரியவந்துள்ளது.

தொடர்ந்து இதுகுறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பவம் திருவண்ணாமலையில் இன்று பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.


# அண்ணா பல்கலைக்கழகத்தில் ஆளுநர் ஆய்வு

சென்னை, டிச.30

அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் விஸ்வரூபம் எடுத்துள்ளது.

இந்த வழக்கில் கோட்டூர்புரத்தைச் சேர்ந்த ஞானசேகரன் என்பவரை போலீசார் கைது செய்துள்ளனர். இந்த சம்பவம் மாநிலம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மாணவி வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு சென்னை ஐகோர்ட்டில் நடந்து வருகிறது.



இந்நிலையில் மாணவி வன்கொடுமை சம்பவம் தொடர்பாக சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் ஆளுநர் ஆர்.என்.ரவி ஆய்வு செய்தார். பல்கலைக்கழக பாதுகாப்பு தொடர்பாகவும் ஆளுநர் ஆலோசனை நடத்த உள்ளார்.

மாணவி வன்கொடுமை சம்பவம் தொடர்பாக உள் விசாரணை குழுவிடம் அவர் ஆலோசனை நடத்த உள்ளார்.

# மணப்பாறை அருகே விபத்தால் சாலையில் நின்ற லாரி மீது மற்றொரு லாரி மோதல் டிரைவர் பலி

மணப்பாறை, டிச.30

திருச்சி மாவட்டம், மணப்பாறை அருகே உள்ள திருச்சிமதுரை தேசிய நெடுஞ்சாலையில் இன்று அதிகாலை சுற்றுலா வேன் சென்று கொண்டிருந்தது. இந்த வேன் துவரங்குறிச்சி முக்கன்பாலம் என்ற இடத்தில் வந்தபோது எதிரே வந்த ஆம்னி பேருந்தும் வேனும் மோதிக்கொண்டன.

இதனால் அப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. பின்னால் வந்த வாகனங்கள் வரிசையாக நின்று கொண்டிருந்தன. சற்று தொலைவில் உள்ள வனத்துறை அலுவலகம் வரை வாகனங்கள் வரிசையாக நின்றன.

கடைசியாக வனத்துறை அலுவலகம் அருகே தூத்துக்குடியில் இருந்து சென்னைக்கு டிங்கரிங் பவுடர் ஏற்றி சென்ற லாரி நின்றது. இந்த வேளையில் அந்த வழியாக திருச்சியை நோக்கி காலி ஆக்சிஜன் சிலிண்டர்களை ஏற்றிக் கொண்டு ஒரு லாரி வேகமாக வந்தது.



லாரியை டிரைவர் உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த ஜமீர் அகமது (38) என்பவர் ஓட்டினார். அருகில் கிளீனர் அப்துல் சித்திக்(45) அமர்ந்திருந்தார். அதிகாலை வேளை என்பதால் முன்னால் லாரி நின்றுகொண்டிருந்ததை டிரைவர் ஜமீர் அகமது கவனிக்கவில்லை.

எதிர்பாராதவிதமாக முன்னால் நின்ற லாரி மீது காலி சிலிண்டர் லாரி பயங்கரமாக மோதியது. இதில்லாரியின்முன்பகுதி பலத்த சேதம் அடைந்தது. இந்த விபத்தில் டிரைவர் ஜமீர்அகமது சம்பவ இடத்திலேயே பலியானார். கிளீனர்அப்துல் சித்திக் இடிபாடுகளுக்குள் சிக்கிகொண்டனர்.

விபத்து பற்றி தகவல் கிடைத்த துவரங்குறிச்சி தீயணைப்பு துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று பலியான ஜமீர் அகமது உடலையும், காயம் அடைந்த அப்துல் சித்திக்கையும் கடுமையாக போராடி மீட்டனர். பலத்த காயமடைந்த அப்துல் சித்திக் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.துவரங்குறிச்சி போலீசார் விரைந்து வந்து பலியான ஜமீர் அகமது உடலை பிரேத பரிசோதனைக்காக திருச்சி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இதனால் மதுரைதிருச்சி தேசிய நெடுஞ்சாலையில் சுமார் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# ரேசன் கடைகளில் பொங்கல் பரிசாக ரூ.1000 வழங்க ஏற்பாடு? விரைவில் அறிவிப்பு வெளியாகிறது

சென்னை, டிச.30

தமிழர்களின் அடையாளமாக அனைத்து தரப்பு மக்களாலும் சிறப்பாக கொண்டாடப்படும் பண்டிகைகளில் பெருமைமிகு பண்டிகை பொங்கல் திருநாளாகும்.

இந்த நன்னாள் அனைத்து தொழில்களுக்கும், ஏன் மனித குலத்திற்கே அடித் தளமாய் விளங்கி, உணவளித்து வரும் விவசாய பெருங்குடி மக்களுக்கு நன்றி செலுத்தும் ஒரு நாளாக தமிழர்களாகிய அனைவராலும் கொண்டாடப்படும் ஒரு பெருமைமிகு விழா ஆகும்.

பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாடும் வகையில் தமிழக அரசு ஒவ்வொரு ஆண்டும் ரொக்க பணம் வழங்குவதை வழக்கமாக கொண்டுள்ளது. கடந்தஆண்டு1கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு கரும்பு ஆகியவற்றுடன் குடும்ப அட்டைதாரர்களுக்கு 1000 ரூபாய் ரேசன் கடைகள் மூலம் வழங்கப்பட்டது.



அதே போல் இந்த ஆண்டும் பொங்கல் பண்டிகைக்கு ரூ.1000 மற்றும் பொங்கல் பொருட்கள் வழங்க அரசின் சார்பில் ஏற்பாடுகள் நடந்து வருகிறது. இதற்கான முறையான அறிவிப்பு அடுத்த வாரம் வெளியாகும் என தெரிகிறது.

மத்தியமாநில அரசு ஊழியர்கள், வருமான வரி செலுத்துவோர், பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரிவோர், சர்க்கரை அட்டைதாரர்கள். பொருளில்லா அட்டைதாரர்கள் தவிர்த்து ஏனைய குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் 1000 ரூபாய் பொங்கல் பரிசாக நியாய விலைக் கடைகளில் பொங்கல் திருநாளுக்கு முன்னதாக ரொக்கமாக வழங்கப்படும் என தெரிகிறது.

பொங்கல் பரிசு தொகுப்புடன் இலவச வேட்டிசேலைகள் வழங்கவும் ஏற்பாடுகள்நடைபெற்று வருகிறது.

இதன் மூலம் தமிழகம் முழுவதும் 2 கோடியே 19 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கை தமிழர்கள் மறு வாழ்வு முகாம்களிலும் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கப்படும் என தெரிகிறது.

பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் திட்டத்தை சென்னையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் விரைவில் தொடங்கி வைப்பார் என தெரிகிறது.

# மேலும் சில மாணவிகளை பாலியல் வன்கொடுமை செய்தாரா ஞானசேகரன்? விசாரணை தீவிரம்

சென்னை, டிச.30

சென்னை கிண்டியில் உள்ள அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவிக்கு நேர்ந்த பாலியல் வன்கொடுமை சம்பவம் தொடர்பாக கைதான ஞானசேகரகனின் செல்போனை ஆய்வு செய்த போலீஸ் அதிகாரிகள் கூறுகையில், "ஞானசேகரன் காமகொடூரனாக இருப்பது தெரிந்தது. நிறைய பாலியல் குற்றங்களை அவன் செய்து இருப்பதற்கு வாய்ப்புகள் இருக்கிறது" என்றனர்.

போலீஸ் அதிகாரிகள் மேலும் கூறுகையில், "ஞானசேகரன் மாணவிகள் மட்டுமின்றி தனது மிரட்டலுக்கு பணியும் பெண்கள் அனைவரையுமே செல்போனில் படமாக்கி இருக்கிறார். அந்த செல்போன் காட்சிகளை அவர் கடந்த 6 மாதமாக சேமித்து வைத்து இருப்பதை கண்டறிந்துள்ளோம்.

அந்த வீடியோ காட்சிகளை அவர் வாட்ஸ்அப் மூலம் வேறு யாருக்காவது பகிர்ந்து இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. அதுபற்றியும் தீவிர ஆய்வு செய்து வருகிறோம். செல்போன் வீடியோ காட்சிகளுக்கு விடை கிடைத்தால்தான் இதில் அடுத்தக்கட்ட நகர்வு இருக்கும்" என்றனர்.

இதன் மூலம் அண்ணா பல்கலைக்கழகம் வளாகம் மட்டுமின்றி மேலும் பல இடங்களில் குற்றவாளி ஞானசேகரன் பல குற்றங்களில் ஈடுபட்டு இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

அதற்கு அவரது செல்போன் வீடியோ காட்சிகளை போலீசார் ஆதாரமாக சொல்கிறார்கள்.

ஞானசேகரனின் செல்போனில் இருக்கும் வீடியோக்களில் தற்போது அண்ணா பல்கலைக்கழகத்தில் படிக்கும் மாணவிகள் யாராவது இருக்கிறார்களா? என்று ஆய்வு நடந்து வருகிறது. அப்படி மாணவிகள் இருந்தால் அவர்களிடம் பேசி புகார் பெறுவதற்கு போலீசார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஒருவேளை மேலும் சில மாணவிகள் ஞானசேகரனால் பாதிக்கப்பட்டு இருப்பது உறுதிப்படுத்தப்பட்டால் அவர் மீதான வழக்குகள் மேலும் இறுகும் என்று கூறப்படுகிறது.

இதன் காரணமாக இந்த சர்ச்சை மேலும் அடுத்தடுத்து பரபரப்பை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# மணிப்பூர் பிரச்சனைக்கு ஏன் அமைதியாக இருந்தீர்கள்? அண்ணாமலையை வினவிய திவ்யா சத்யராஜ்

சென்னை, டிச.30

சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி ஒருவருக்கு நேர்ந்த பாலியல் வன்கொடுமை சம்பவம் தமிழகத்தையே அதிர்க்குள்ளாக்கியது. மேலும் இந்த சம்பவம் தொடர்பாக கைதான ஞானசேகரன் என்பவர், திமுகவை சார்ந்தவர் என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின. இருப்பினும் இந்த குற்றச்சாட்டை திமுக மறுத்தது.

இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் செய்தியாளர்களை சந்தித்த பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை, பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றும், இந்த விவகாரத்தில் தி.மு.க. அரசை கண்டித்து





தன்னை தானே சாட்டையால் அடித்துக்கொள்ளும் போராட்டத்தை வெள்ளிக்கிழமை (நேற்று) நடத்துவதாகக் கூறியிருந்தார்.

அதன்படி, கோவையில் உள்ள தனது இல்லத்தின் முன்பு, தன்னைத்தானே சாட்டையால் அடித்துக் கொள்ளும் போராட்டத்தில் அண்ணாமலை ஈடுபட்டார். இதற்கு அரசியல் தலைவர்கள் பலரும் விமர்சித்து வருகின்றனர்.

இந்த நிலையில், சட்டையால் தன்னைத்தானே அடித்துக்கொண்ட அண்ணாமலைக்கு நடிகர் சத்யராஜ் மகள் திவ்யா சரமாரியாக கேள்வி எழுப்பியுள்ளார். இதுதொடர்பாக அவர் கூறியுள்ளதாவது:

மணிப்பூர்பிரச்சனைக்கு ஏன் அமைதியாக இருந்தீர்கள்? கொரோனா பெருந்தொற்றில் அதிகமான இறப்புகள் பதிவான போதுபால்கனியில்நின்று விளக்குகளை ஏந்தும்படி எங்களிடம் கேட்கப்பட்டது ஏன்? கொரோனாவில் இருந்து நம்மை பாதுகாத்துக்கொள்ள நெரிசலான இடங்களிலிருந்து விலகி இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டபோது, சில தலைவர்கள் ஏன் ரத யாத்திரையை ஏற்பாடு செய்ய முயற்சித்தார்கள்? தடுப்பூசி கொள்கை ஏன் பேரழிவை ஏற்படுத்தியது? என கேள்வி கேட்டுள்ளார்.

# நான் உருவாக்கிய கட்சி எனக்கூறிய ராமதாஸ்: மைக்கை எறிந்து விட்டு சென்ற அன்புமணி பொதுக்குழுவில் மோதல்

புதுச்சேரி, டிச.30

புதுச்சேரி பா.ம.க. பொதுக்குழுவில் அக்கட்சியின் நிறுவனர் ராமதாஸ் மற்றும் தலைவர் அன்புமணி இடையே மோதல் ஏற்பட்டது.

முகுந்தன் என்பவரை மாநில இளைஞரணி தலைவராக நியமித்ததற்கு அன்புமணி எதிர்ப்பு தெரிவித்தார். பா.ம.க. கட்சியில் சேர்ந்து 4 மாதங்கள் ஆனவருக்கு பதவி அளிப்பதா என மேடையிலேயே அன்புமணி கேள்வி கேட்டார். நான் யாரை நியமிக்கிறேனோ அவர்கள் தான் நிர்வாகிகள் என்றும் நான் உருவாக்கிய கட்சி என பல முறை அழுத்தமாக கூறினார்.




எனது முடிவை ஏற்காதவர்கள் வெளியேறி விடலாம் என ராமதாஸ் கூறியதும், மேடையிலேயே சரி சரி என அன்புமணி கூறினார்.

அன்புமணிக்கு முகுந்தன்துணையாக இருப்பார் என ராமதாஸ் கூற, தேவையில்லை என அன்புமணி பதில் கூறினார்.

சரி சரி என கூறிய அன்புமணியிடம் வெளியேறுவது என்றால் வெளியேறு என்று ராமதாஸ் கூறினார்.

பனையூரில் எனக்கு அலுவலகம் உள்ளது. அங்கு வந்து தொடர்பு கொள்ளுங்கள் என மைக்கை எறிந்து விட்டு அன்புமணி சென்றார்.

முகுந்தன் என்பவர் அன்புமணியின் சகோதரி மகன் ஆவார்.

# நாளை வண்டலூர் பூங்கா செயல்படும் என அறிவிப்பு

வண்டலூர், டிச.30

வண்டலூர் உயிரியல் பூங்காவில் சிங்கம், புலி, யானை உள்ளிட்ட பல வகையான விலங்குகளும், பறவைகளும் உள்ளன. இதனைக் காண விடுமுறை தினங்களில் அதிக அளவில் சுற்றுலா பயணிகள் கூடுவர்.

இந்த நிலையில், வண்டலூர் உயிரியல் பூங்கா வரும் செவ்வாய்கிழமை பார்வையாளர்களுக்காக திறந்து இருக்கம் என பூங்கா நிர்வாகம் அறிவித்துள்ளது.




வழக்கமாக செவ்வாய்கிழமை விடுமுறை விடும் நிலையில், விடுமுறையொட்டி பூங்கா செயல்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# தஞ்சை மருத்துவ கல்லூரி ஆஸ்பத்திரியில் பயிற்சி பெண் டாக்டரை தாக்கிய தொழிலாளி கைது

தஞ்சாவூர், டிச.30

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு அருகே உள்ள கண்ணந்தங்குடியை சேர்ந்தவர் வைத்திலிங்கம் மகன் கரிகாலன் (வயது 42). கூலி தொழிலாளி.

இவர் கடந்த சில நாட்களாக தொடர்ந்து காய்ச்சலால் அவதிப்பட்டார். இதையடுத்து தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக உள்நோயாளியாக அனுமதிக்கபட்டார்.

இந்நிலையில் கரிகாலன் தனது கையில் உள்ள ஊசி செலுத்தும் வென்ப்ளானை கழட்டி வீசி உள்ளார்.

அப்போது ஊசி செலுத்த சென்ற பயிற்சி பெண் டாக்டர், இது பற்றி கேட்டார். அப்போது கரிகாலன் திடீரென பயிற்சி டாக்டரை



தாக்கினார்.

இது குறித்து டாக்டர் மருத்துவக் கல்லூரி போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார். இதையடுத்து போலீசார் மருத்துவ பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து கரிகாலனை கைது செய்தனர். இந்த சம்பவம் மருத்துவ கல்லூரி ஆஸ்பத்திரியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ஊடகங்கள் எதிரிகள் அல்ல! அரசு அதிகாரிகளின் நேர்மை, வெளிப்படைத்தன்மை குறித்தும் உயர்நீதிமன்றம் கேள்வி

சென்னை, டிச.30

அண்ணா பல்கலைக்கழக மாணவி வன்கொடுமை செய்யப்பட்ட விவகாரம் தொடர்பான அறிக்கை சீலிடப்பட்ட கவரில் சென்னை ஐகோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டது.

இதையடுத்து ஐகோர்ட்டில் வழக்கு விசாரணை தொடங்கியது.

விசாரணையின்போது, மாணவி தொடர்பான எப்.ஐ.ஆரை பொதுவெளியில் வெளியிட்டது மீடியாதான் என்று அரசு தலைமை வழக்கறிஞர் கூறினார்.

இது தொடர்பாக ஐகோர்ட் நீதிபதிகள் கூறுகையில்,

★ ஊடக சுதந்திரத்தை தடுக்க முடியாது. ஊடகங்களும் பொறுப்புடன் செயல்பட வேண்டும்.

★ ஊடகங்களால் தான் இதுபோன்ற சம்பவங்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன, ஊடகங்கள் எதிரிகள் அல்ல.

★ பத்திரிகைகள் தவறாக திரித்து வெளியிட்டு விட்டதாக கூறக்கூடாது.

★ அரசு அதிகாரிகள் நேர்மையாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் இருப்பதில் என்ன சிரமம் உள்ளது என கேள்வி எழுப்பினர்

# ராணிப்பேட்டை அருகே சென்னை, பெங்களூரு சாலையில் வெள்ளம் கடும் போக்குவரத்து நெரிசல்

வேலூர், டிச.30

வேலூர், ராணிப்பேட்டை மாவட்டத்தில் நேற்று பலத்த மழை பெய்தது. மேலகுப்பம் மலையில் இருந்து மழை நீர் அங்குள்ள விவசாய நிலங்களுக்குள் புகுந்தது.

விவசாய நிலங்களில் இருந்த மழை நீர் வடிந்து இன்று காலை ஆற்காடு அடுத்த பூட்டுத்தாக்கு சென்னை பெங்களூரு தேசிய நெடுஞ்சாலைக்கு வந்தது. அப்பகுதியில் தனியார் ஆஸ்பத்திரி சார்பில் மேம்பாலம் அமைக்கும் பணி நடந்து வருவதால் மழை நீர் கால்வாயில் அடைப்பு ஏற்பட்டது. மழை நீர் வழிந்து செல்ல வழி இல்லாததால் தேசிய நெடுஞ்சாலையில் மழை நீர் குளம் போல் தேங்கியது. ஏற்கனவே கடந்து 2 நாட்களாக பெய்த மழையில் சாலை முழுவதும் குண்டும் குழியுமாக மாறியது. குண்டும் குழியுமான சாலையில் மழைநீர் தேங்கியதால் வாகனங்கள் செல்வதில்



சிரமம் ஏற்பட்டன.

இதனால் சென்னையில் இருந்து பெங்களூரு மார்க்கமாக வரும் வாகனங்கள் தேசிய நெடுஞ்சாலையில் பல மணி நேரம் வரிசையாக நின்றன.

பயணிகள் மற்றும் வேலைக்கு செல்வோர் குறித்த நேரத்திற்கு செல்ல முடியாமல் அவதி அடைந்தனர்.

தேசிய நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் சாலையில் தேங்கியுள்ள மழை நீரை வெளியேற்றி சாலையை சீரமைத்து வாகன ஓட்டிகளின் சிரமத்தை போக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

# புத்தாண்டை முன்னிட்டு திருவேற்காடு தேவி கருமாரியம்மன் கோவிலில் நள்ளிரவு 12 மணிக்கு நடை திறப்பு

பூந்தமல்லி, டிச.30

ஆங்கிலப் புத்தாண்டையொட்டி திருவேற்காடு தேவி கருமாரியம்மன் கோவிலில் வழிபாட்டிற்கு வரும் பக்தர்களுக்காக பல்வேறு சிறப்பு வசதிகள் செய்வது குறித்த ஆலோசனைக் கூட்டம் கோவில் அலுவலகத்தில் கோவில் இணை ஆணையர் அருணாசலம் தலைமையில் நடைபெற்றது.

திருவேற்காடு தேவி கருமாரியம்மன் கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் ஆங்கிலப் புத்தாண்டு தினமான ஜனவரி 1ந் தேதி அன்று அம்மனை தரிசனம் செய்ய வருகை தரும் பக்தர்களுக்காக டிசம்பர் 31ந் தேதி நள்ளிரவு 12 மணிக்கு நடை திறப்பது கடந்த 40 வருடங்களாக நடைமுறையில் இருந்து வரும்.

நிலையில், இவ்வாண்டும் நள்ளிரவு 12 மணிக்கு நடை திறக்கப்பட்டு, பக்தர்கள் அம்மனை தரிசனம் செய்ய அனைத்து ஏற்பாடுகளும் செய்வது கோவிலுக்கு வருகைதரும் பக்தர்களுக்கு தேவையான பாதுகாப்பான குடிநீர்வசதி, கழிவறை மற்றும் குளியலறை வசதி, அன்னதானம், பிரசாதம் வழங்குதல், பக்தர்களுக்கு இலவச மருத்துவ உதவி, வாகனங்கள் நிறுத்தும் வசதி, முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் சிரமமின்றி எளிதாக தரிசனம் செய்யும் வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகள் செய்வது என முடிவு செய்யப்பட்டது.



கோவிலில் நள்ளிரவு 12 மணிக்கு கோ பூஜை தொடங்கி, அம்மனுக்கு அபிஷேகம் செய்யப்பட்டு, தேவி கருமாரியம்மன் தங்க கவசத்தில் காட்சி அளித்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பார். மாலை சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு, தேவி கருமாரியம்மன் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சி அளித்து அருள் பாலிப்பார்.

திருவேற்காடு தேவி கருமாரியம்மன் கோவிலின் உப கோவிலான சம்மந்தரால் பாடல்பெற்ற தொண்டை நாட்டு சிவாலயமும், நான்கு வேதங்களும், வேல மரங்களாய் நின்று சிவபெருமானை வழிபட்ட தலமான பாலாம்பிகை உடனுறை வேதபுரீஸ்வரர் திருக்கோவிலிலும், 2025 புத்தாண்டு சிறப்பு தரிசனத்திற்காக டிசம்பர் 31ந் தேதி நள்ளிரவு 12 மணிக்கு நடை திறக்கப்பட்டு, அபிஷேகங்கள் செய்யப்பட்டது.

சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு இறைவன் இறைவி அருள் பாலிக்கவும் ஏற்பாடு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் தக்கார் டெக்கான் மூர்த்தி, நகராட்சி அதிகாரிகள், காவல்துறையினர், வியாபாரிகள் சங்கத்தினர், மாநகர போக்குவரத்து, தீயணைப்புத்துறை, மின்வாரியம், உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த அதிகாரிகள், ஊழியர்கள் பங்கேற்றனர்.

# தியேட்டரில் பெட்ரோல் குண்டு வீசிய வழக்கில் கைதான 2 வாலிபர்களின் வீடுகளில் தீவிரவாத தடுப்பு பிரிவு போலீசார் சோதனை

நெல்லை, டிச.30

நெல்லை மேலப்பாளையம் ரவுண்டானா அருகே பிரதான சாலையில் உள்ள அலங்கார் திரையரங்கில், நடிகர் சிவகார்த்திகேயன் நடித்த 'அமரன்' படம் கடந்த மாதம் திரையிடப்பட்டது. இந்த படத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்கள் நடைபெற்றது. இந்நிலையில், கடந்த மாதம் 16ந்தேதி அதிகாலையில் திரையரங்க வாயிலில் 2 வாலிபர்கள் பெட்ரோல் குண்டுகளை வீசிவிட்டு, தப்பி ஓடி விட்டனர்.

இதுகுறித்து மேலப்பாளையம் போலீசார் வழக்குப்பதிவு செய்து, விசாரித்து வந்தனர். தென்மண்டல தீவிரவாத தடுப்புப் பிரிவு போலீசாரும் விசாரணை மேற்கொண்ட நிலையில், இந்த வழக்கு தொடர்பாக மேலப்பாளையம் பஷீரப்பா தெருவை சேர்ந்த முகமது யூசுப் ரசின்(வயது 30), ஆசூரான் மேலத்தெருவை சேர்ந்த செய்யது முகமது புகாரி (29) ஆகியோரை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.




இந்த வழக்கு தொடர்பாக தென்மண்டல தீவிரவாத தடுப்பு பிரிவு போலீசார் மேலப்பாளையத்தில் முகாமிட்டு திடீர் விசாரணையில் ஈடுபட்டனர்.

தீவிரவாத தடுப்பு பிரிவு போலீஸ் சூப்பிரண்டு ரமேஷ் கிருஷ்ணா தலைமையில் சுமார் 10க்கும் மேற்பட்ட அதிகாரிகள், யூசுப் ரசின், முகமது புகாரி ஆகியோரின் வீடுகள் மற்றும் அவர்களது உறவினர்களின் வீடுகளில் திடீர் சோதனை நடத்தினர். சுமார் 2 மணிநேரமாக பஷீரப்பா தெரு, ஆசூரான் தெருவில் சோதனை நடத்தியதையொட்டி மாநகர ஆயுதப்படை போலீசார் அங்கு குவிக்கப்பட்டிருந்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

## திரைத்துறையில் 45 ஆண்டுகளை நிறைவு செய்த குஷ்பு



பாலிவுட் திரையுலகில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி, பின்னர் தமிழில் 'வருஷம் 16' திரைப்படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமானார் குஷ்பு. ரஜினிகாந்த், கமல்ஹாசன், விஜயகாந்த், சத்யராஜ், பிரபு, போன்ற பல முன்னணி நடிகர்களுக்கு ஜோடியாக குஷ்பு நடித்திருக்கிறார்.

இயக்குனர் சுந்தர் சியை காதலித்து திருமணம் செய்து கொண்ட இவருக்கு, இரண்டு மகள்கள் உள்ளனர். இந்நிலையில், இன்றுடன் திரைத்துறையில் குஷ்பு காலடி எடுத்து வைத்து 45 ஆண்டுகள் நிறைவடைந்திருக்கிறது.

இதனையடுத்து நடிகை குஷ்பு வீடியோ வெளியிட்டு தனக்கு உறுதுணையாக இருந்தவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

## ஓ.டி.டியில் வெளியானது சிவராஜ்குமாரின் 'பைரதி ரணகல்'





பிரபல கன்னட நடிகர் சிவராஜ்குமார். இவரது நடிப்பில் கடந்த நவம்பர் மாதம் 29ம் தேதி திரையரங்குகளில் வெளியான படம் 'பைரதி ரணகல்'. இந்த படத்தில் ருக்மணி வசந்த், ராகுல் போஸ், தேவராஜ், அவினாஷ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்தனர்.

கடந்த 2017ம் ஆண்டு பிளாக்பஸ்டர் ஹிட்டான 'முப்தி' படத்தின் தொடர்ச்சியாக உருவான இப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது.

இந்நிலையில், இப்படம் ஓ.டி.டியில் வெளியாகி உள்ளது. அதன்படி, அமேசான் பிரைம் தளத்தில் கடந்த 25ம் தேதி 'பைரதி ரணகல்' வெளியாகி இருக்கிறது.

## வசூலில் தோல்வி...சம்பள பாக்கியை வாங்க மறுத்த சாய் பல்லவி எந்த படம் தெரியுமா?



பிரேமம் படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமானவர் சாய் பல்லவி. இதில் இவர் நடித்த 'மலர் டீச்சர்' கதாபாத்திரம் ஏராளமான ரசிகர்களை கவர்ந்தது. முதல் படத்திலேயே இவருக்கு சிறந்த நடிகை என்று பெயர் கிடைத்ததை தொடர்ந்து தமிழ், தெலுங்கு உள்ளிட்ட மொழி படங்களில் நடிக்க வாய்ப்புகள் கிடைத்தன.

தற்போது முன்னணி நடிகையாக வலம் வரும் சாய்பல்லவி, முன்பு தான் நடித்த படம் ஒன்று தோல்வியடைந்ததால் சம்பள பாக்கியை வாங்க மறுத்திருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

ஆம், கடந்த 2018ம் ஆண்டு ஹனு ராகவபுடி இயக்கத்தில் வெளியான பாடி பாடி லெச்சே மனசு படம் வெறும் ரூ. 8 கோடி மட்டுமே வசூலித்து தோல்வியடைந்தது. இதனால், படத்தில் கையெழுத்திடும்போது வாங்கிய தொகையை தவிர பாக்கி பணத்தை சாய் பல்லவி வாங்க மறுத்திருக்கிறார். அவ்வாறு அவர் தியாகம் செய்த பணம் ரூ. 40 லட்சத்தை நெருங்கும் என்று கூறப்படுகிறது.

சமீபத்தில், சிவகார்த்திகேயனுடன் 'அமரன்' திரைப்படத்தில் நடித்து ரசிகர்கள் மத்தியில் பாராட்டை பெற்ற சாய்பல்லவி, தற்போது நாக சைதன்யாவுடன் 'தண்டேல்' படத்திலும், பாலிவுட்டில் 'ராமாயணம்' படத்திலும் நடித்து வருகிறார்.

## நானி தயாரிக்கும் சிரஞ்சீவி படத்தில் கதாநாயகி கிடையாதா? வெளியான முக்கிய தகவல்

சிரஞ்சீவி தற்போது 'விஸ்வம்பரா' படத்தில் நடித்து முடித்துள்ளார். இப்படம் அடுத்த மாதம் 10ம் தேதி வெளியாக உள்ளது. இப்படத்தை தொடர்ந்து, தனது அடுத்த படத்தில் சிரஞ்சீவி நடிக்க உள்ளார்.

இப்படத்தை தசரா பட இயக்குனர் ஸ்ரீகாந்த் ஒடேலா இயக்குகிறார். இன்னும் பெயரிடப்படாத இப்படத்தை நடிகர் நானி, எஸ்எல்வி சினிமாஸின் சுதாகர் செருகுரியுடன் இணைந்து தயாரிக்கிறார்.

இப்படத்தில் நடிக்க உள்ள நடிகர்கள் விரைவில் அறிவிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், இப்படத்திலிருந்து முக்கிய தகவல் ஒன்று வெளியாகி உள்ளது.

அதன்படி, முன்னதாக இப்படத்தில் பாடல்களும், நடிகையும் கிடையாது என்று இணையத்தில் பரவி வந்த தகவலை எஸ்எல்வி சினிமாஸின் தயாரிப்பாளர் சுதாகர் மறுத்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், 'சமூக ஊடகங்களில் இப்படத்தில் பாடல்களும், நடிகையும் கிடையாது என்று பரவி வரும் விஷயங்களில் எந்த உண்மையும் இல்லை. நாங்கள் தற்போது ஒளிப்பதிவு மற்றும் இசையமைப்பாளரை தேர்வு செய்துள்ளோம். கதை வளர்ச்சி நிலையில் உள்ளது' என்றார்.

## பரபரப்பின் உச்சத்தில் பாக்சிங் டே டெஸ்ட்.. கடைசி விக்கெட்டை வீழ்த்த தடுமாறும் இந்தியா

இந்தியா ஆஸ்திரேலியா இடையிலான பார்டர் கவாஸ்கர் கோப்பை தொடரின் 4வது டெஸ்ட் போட்டி மெல்போர்னில் நடைபெற்று வருகிறது. பாக்சிங் டே டெஸ்ட் போட்டியாக நடைபெற்று வரும் இதில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த ஆஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 474 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக ஸ்டீவ் சுமித் 140 ரன்கள் குவித்தார். இந்தியா தரப்பில் பும்ரா 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதனையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய இந்தியா 119. 3 ஓவர்களில் 369 ரன்கள் குவித்த நிலையில் ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக நிதிஷ் ரெட்டி 114 ரன்கள் அடித்தார். ஆஸ்திரேலியா தரப்பில் கம்மின்ஸ், லயன் மற்றும் போலந்து ஆகியோர் தலா 3 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

பின்னர் 105 ரன்கள் முன்னிலையுடன் 2வது இன்னிங்சை ஆடிய ஆஸ்திரேலியா ஆரம்பம் முதலே இந்திய பந்துவீச்சில் தடுமாறியது. தொடக்க ஆட்டக்காரர் கான்ஸ்டாசை இந்த முறை 8 ரன்களில் பும்ரா கிளீன் போல்டாக்கினார்.

அவரை தொடர்ந்து கவாஜா 21 ரன்களிலும், ஸ்டீவ் சுமித் 13 ரன்களிலும், ஹெட் 1 ரன்னிலும், மார்ஷ் ரன் எதுவுமின்றியும், கேரி 2 ரன்களிலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இந்த இக்கட்டான சூழலில் கை கோர்த்த மார்னஸ் லபுஸ்சேன் கேப்டன் கம்மின்ஸ் பொறுப்புடன் விளையாடி அணியை முன்னெடுத்து சென்றனர். இந்த கூட்டணியை சிராஜ் பிரித்தார். அவரது பந்துவீச்சில் நிதானமாக விளையாடி அரைசதம் அடித்த லபுஸ்சேன் 70 ரன்களில் ஆட்டமிழந்தார். அணியை வலுவான முன்னிலையை நோக்கி பயணிக்க வைத்த கம்மின்ஸ் 41 ரன்கள் அடித்த நிலையில் ஆட்டமிழந்தார்.

பின்னர் கடைசி விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த ஸ்காட் போலன்ட் நாதன் லயன் இணை இந்திய பந்துவீச்சாளர்களுக்கு தண்ணி காட்டியது. இந்த கூட்டணியை உடைப்பதற்கு கேப்டன் ரோகித் சர்மா பவுலர்களை மாற்றி மாற்றி தாக்குதல் கொடுத்தார். இருப்பினும் இந்திய பந்துவீச்சை சமாளித்து விளையாடிய அவர்கள் அணி 200 ரன்களை கடக்க உதவினர். மேலும் 50 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்தும் அசத்தினர். இந்த ஜோடியை பிரிக்க முடியாமல் இந்தியா தடுமாறி வருகிறது.

4வது நாள் முடிவில் ஆஸ்திரேலியா 9 விக்கெட்டுகளை இழந்து 228 ரன்கள் அடித்துள்ளது. நாதன் லயன் 41 ரன்களுடனும், ஸ்காட் போலன்ட் 10 ரன்களுடனும் களத்தில் உள்ளனர். இந்தியா தரப்பில் பும்ரா 4 விக்கெட்டுகளும், சிராஜ் 3 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

ஆஸ்திரேலியா இதுவரை 333 ரன்கள் முன்னிலை பெற்றுள்ளது. நாளை கடைசி நாள் ஆட்டம் என்பதால் இந்த போட்டி ரசிகர்கள் மத்தியில் உச்சகட்ட பரபரப்பை உண்டாக்கியுள்ளது.

## ஜிம்பாப்வேவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட்: வலுவான நிலையில் ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி ஜிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. அதன்படி இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி புலவாயோவில் நடந்து வருகிறது.

இதில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த ஜிம்பாப்வே முதல் இன்னிங்சில் 586 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக சீன் வில்லியம்ஸ் 154 ரன்களும், பிரையன் பென்னெட் 110 ரன்களும், எர்வின் 104 ரன்களும் குவித்தனர். பின்னர் தனது முதல் இன்னிங்சை தொடங்கிய ஆப்கானிஸ்தான் 2வது நாள் முடிவில் 2 விக்கெட்டுக்கு 95 ரன் எடுத்திருந்தது. ரமத் ஷா (49 ரன்), ஹஷ்மத்துல்லா ஷகிடி (16 ரன்) களத்தில் இருந்தனர்.

3வது நாளான நேற்று ரமத் ஷா ஷகிடி ஜோடி முழுமையாக ஆதிக்கம் செலுத்தியது. இவர்களை கடைசி வரை ஜிம்பாப்வே பவுலர்களால் பிரிக்க முடியவில்லை. 3வது நாள் முடிவில் ஆப்கானிஸ்தான் அணி 125 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கு 425 ரன்கள் குவித்து வலுவான நிலையில் உள்ளது. ரமத் ஷா 231 ரன்களுடனும் , ஷகிடி 141 ரன்களுடனும் களத்தில் உள்ளனர். . 4வது நாள் ஆட்டம் நடைபெற உள்ளது.

## பார்டர் கவாஸ்கர் கோப்பை தொடரிலிருந்து ஆஸ்திரேலிய வீரர் விலகல்



இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட பார்டர் கவாஸ்கர் கோப்பை தொடரில் விளையாடி வருகிறது. இதில் 3 போட்டிகள் முடிவடைந்த நிலையில் தொடர் 11 என்ற கணக்கில் சமனில் உள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கு இடையிலான 4வது போட்டி மெல்போர்னில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் இந்த தொடரின் எஞ்சிய போட்டிகளில் இருந்து ஆஸ்திரேலிய அணி வீரர் ஜோஷ் இங்கிலிஸ் விலகியுள்ளார். ஆஸ்திரேலியாவின் பிளேயிங் 11ல் இடம்பெறாத இவர் 4வது போட்டியில் மாற்று பீல்டராக களத்திற்கு வந்தபோது காயமடைந்துள்ளார். காயம் 5வது போட்டிக்குள் முழுமையாக குணமடைய வாய்ப்பில்லை என்பதால் இவர் இந்த தொடரிலிருந்து விலகியுள்ளார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.